ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1768/16 - 2012 ජූලි මස 25 වැනි බදාදා - 2012.07.25
1768/16 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

6 ஆம் பிரிவின் கீழ் சான்றிதழ்

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவங்ச ஆகிய நான், கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி வீடமைப்பு நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக, சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அரசினால் சுவீகரிக்கப்பட வேண்டும் என இத்தால் உறுதி செய்கிறேன்.

விமல் வீரவங்ச,
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2012, யூலை 13.

**அட்டவணை**

காணி வரைபடம் P. P. Co. 7798 இன் 16 $^{1/2}$ ஆம் இலக்க, காணித்துண்டின் ஒரு பகுதியான தம்பிகேவத்த என்று அழைக்கப்படும் காணியின் அண்ணளவாக 2.30 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு, மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 524 A பிரகத்திபுர என்ற கிராம சேவகர் பிரிவின், மாதிவெல என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு அமைந்து காணப்படுகின்றன:-

வடக்கு : காணித்துண்டுகள் இலக்கம் 12 மற்றும் 16 $^{2/2}$;
கிழக்கு : காணித்துண்டுகள் இலக்கம் 16 $^{2/2}$ மற்றும் 17 ;
தெற்கு : காணித்துண்டுகள் இலக்கம் 17 மற்றும் 18 ;
மேற்கு : காணித்துண்டுகள் இலக்கம் 16 $^{1/2}$ மற்றும் 12.

8- 279

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.